## த.வெ.க. அரசில் புதுமோதல்: தடுமாறும் முதல்வர்!

# தலைமைச் செயலாளர் அணி - முதல்வரின் ஆலோசகர்கள் அணி இடையே அதிகார போட்டி!

**கட்டுக்கட்டாக பைல்களுடன் அலுவலகத்துக்கு களைப்பாக வந்தார் மிஸ்டர் காக்ரோச். அவரிடம், "என்னங்க பைல்கள பார்த்தா பெரிய மேட்டர் உள்ள இருக்கும்போல" என கேட்டோம். உடனே அவர், "அட ஏங்க நீங்க வேற... இந்த அரசில் எந்த அணி பேசுனாலும் பிரச்சினையா இருக்கு. இப்போ புதுசா இரண்டு அணி வேற ஸ்டார்ட் ஆகிருக்கு. அதுவும் அரசை வழி நடத்தும் சீப்பும், சி.எம்.யோட இரண்டு கைகளும் சண்டை போடுறதுதான் இப்போ ஹாட் டாப்பிக்" என்றார். இது என்னங்க புது தகவலா இருக்கேன்னு கொஞ்சம் விவரமா சொல்லுங்க என்றோம். சரி சொல்றேன் என்று மளமளமென கோட்டையில் நடக்கும் அதிகார சண்டையை கொட்டினார் மிஸ்டர் காக்ரோச்.**

"தமிழகத்தில் த.வெ.க. ஆட்சி அமைந்த பிறகு, ஆட்சியாளர்களும் நிம்மதியாக இல்லை. மக்களும் நிம்மதியாக இல்லை, அரசு ஊழியர்களும் நிம்மதியாக இல்லை, வியாபாரிகள், தொழில் அதிபர்கள், தொழிலாளர்கள், விசைத்தறியாளர்கள் என எல்லா தரப்பு மக்களும் ஒருவித பதற்றத்துடனேயே வாழ வேண்டிய சூழ்நிலை தற்போது உருவாகியுள்ளது. ஒரு உறுதியற்ற தன்மை நிலவுகிறது. அதற்கு காரணம், தற்போது ஆட்சியாளர்களில் செங்கோட்டையனைத் தவிர அனைவருமே புதியவர்கள். அவர்கள் ஆட்சியின் அதிகாரம் என்ன என்று தெரிந்து கொள்




ளவே சிரமப்படுகிறார்கள். சிலர் என்ன என்று தெரியாமல், எல்லாம் தெரிந்த மாதிரி செயல்படுவதால் ஏற்படும் குழப்பம் படுபயங்கரமாக உள்ளதாம். இதன் வெளிப்பாடுதான், தமிழக அரசியல் முக்கியமான பதவிகளில் வடமாநிலத்தைச் சேர்ந்தவர்கள் நியமனம் என்று கூறப்படுகிறது.

தலைமைச் செயலாளர் தெலங்கானா மாநிலம் ஐதராபாத்தைச் சேர்ந்தவர். அவர் டெல்லியில் படித்ததால், பா.ஜ. தலைவர்கள் அதிகமானவர்கள் அறிமுகமானவர்கள். அவர்கள் மூலம்தான் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் எடப்பாடி முதல்வராக இருந்தபோது அவருக்கு முதன்மைச் செயலாளராக நியமிக்கப்பட்டார். முக்கிய முடிவுகளை அவர்தான் எடுத்துவந்தார். டெல்லிக்கும், எடப்பாடி பழனிச்சாமிக்கும் ஒரு பாலமாக இருந்தார். அதே பாலத்தை தான் போடுவதாகக் கூறிதான் தற்போது முதல்வர் விஜயுடன் நெருக்கமாக இருக்கிறார். ஆனால், விஜய் ஆட்சிக்கு வருவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர்கள் விஷ்ணு ரெட்டி, ஜான் ஆரோக்கியசாமி. இதனால் தான் இவர்கள் இருவருமே முதல்வரின் தனி செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

**பட்டியல் இன அதிகாரிகள் கடும் பாதிப்பு!**

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளின் நியமனம் அவர்கள் மூலம் தான் நடந்தது. அவர்கள்தான் ஆட்சிக்கு வேண்டியவர்கள் யார்? வேண்டாதவர்கள் யார் என்று அலசி ஆராய்ந்து நியமித்தனர். அப்போது தலைமைச் செயலாளர் சாய்குமார், வருகிற ஆகஸ்ட் மாதம் தனக்கு ஓய்வு வருகிறது. அதுவரை தலைமைச் செயலாளராக இருக்கிறேன் என்றார். அதற்கு முதல்வர் விஜய் சம்மதித்தார். அவரிடம் நல்ல பெயரும் வாங்கிக் கொண்டார். தற்போது ஆட்சியைப் பற்றி அவருக்கு பாடம் எடுப்பதாக கூறி மேலும் 6 மாதம் பணி நீட்டிப்பு பெற்றுள்ளார். இந்த பணி நீட்டிப்பு பெற்றவுடன், முதல்வருடன் இருக்கும் ஆலோசகர்களை மீறி செயல்படத் தொடங்கியுள்ளாராம்.

சமீபத்தில், 19 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மாற்றம் செய்யப்பட்டனர். அந்த மாற்றம் குறித்து ஆலோசகர்களுடன் ஆலோசனை நடத்தவில்லையாம். தன்னிச்சையாக முடிவு எடுக்கிறாராம். சில ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை குறிப்பிட்ட பதவியில் நியமிக்க வேண்டும் என்றபோது அவர்களை டம்மியாகவும், சிலரை மாற்ற வேண்டும் என்றபோது அவர்களுக்கு அதிகாரம் உள்ள பதவியும் வழங்கியுள்ளார்.

## அமைச்சர்கள் அணிக்குள்ளும் மோதல்!

குறிப்பாக வட மாநில அதிகாரிகளுக்கு முக்கிய பதவிகளை வாரி வழங்கியுள்ளார். அதேநிலைமை தான் தற்போது போலீசிலும் உள்ளது. போலீசிலும் வட மாநில அதிகாரிகளின் கை உயர்ந்துள்ளதாம். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள் நியமனத்தில் தமிழக அதிகாரிகள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளார்களாம். அதிலும், பட்டியல் இன அதிகாரிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார்களாம். பட்டியல் இனத்தைப் பொறுத்தவரை அவர்கள், தமிழக அதிகாரிகள்

மட்டுமல்லாது வடமாநில அதிகாரிகளும் பாதிக்கப்பட்டுள்ளார்களாம். இதனால் தமிழக அரசு முடங்கி இருக்கும் சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாம்.

**ஏற்கனவே அமைச்சர்களுக்குள்ளும் மோதல் எழுந்துள்ளது. முதல்வர் விஜய் அணி, புஸ்சி ஆனந்த், ஆதவ் அர்ஜூனா, நிர்மல்குமார் ஆகிய அணிகள் செயல்பட்டு வருகிறதாம். அதில் தற்போது, ராஜ்மோகன் தலைமையில் தலித் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் எல்லோரும் ஓரணியில் திரளத் தொடங்கியுள்ளார்களாம். இந்த நிலையில், தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு அணியும், முதல்வரின் ஆலோசகர்கள் தலைமையில் ஒரு அணியும் பிரிந்து நிற்கிறார்களாம்.**

**அதில் ஆலோசகர்கள் இருப்பதால், தங்களது முக்கியத்துவம் குறைந்துவிடும் என்று கருதும் தலைமைச் செயலாளர் அணி, எப்படியாவது ஆலோசகர்களை காலி செய்ய வேண்டும் என்ற முடிவில் உள்ளார்களாம். இதற்காக இருதரப்பும் வரிந்து கட்டிக் கொண்டு செயல்படுகிறார்களாம். இதனால்தான் லஞ்ச ஒழிப்புத்துறையில் இயக்குநர் பதவி நிரப்பப்படாமல் உள்ளதாம் என்றார் மிஸ்டர் காக்ரோச்.**

**நன்றி : 'தினகரன்'**

இணைப்பு : அரசியல் டைரி
21.07.2026

ஊழல் செய்யவும் மாட்டேன், ஊழல் செய்யவும் விடமாட்டேன் என்ற

# முதல்வர் - ஊழலில் உச்சம் தொட்ட விஜயபாஸ்கரை த.வெ.க.வில் சேர்ப்பதா?

## முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி சகாயம் கேள்வி!

**சென்னை, ஜூலை 23-**

**"ஊழலுக்கு எதிராகப் பேசி மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்திய முதலமைச்சர் சி. ஜோசப் விஜய், தற்போது அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஊழல்வாதிகளைத் தன் கட்சியில் இணைத்துக் கொள்வது அவரது லட்சியத்திற்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும்; என்று ஓய்வு பெற்ற சகாயம் ஐ.ஏ.எஸ் தெரிவித்துள்ளார்.**

**அப்படி, ஊழலுக்கு எதிராக பேசிய முதலமைச்சர் விஜய் அ.தி.மு.க.விலிருந்து சில ஊழல்வாதிகளை தமது கட்சியில் இணைத்து இருப்பது என்பது எந்த வகையில் ஏற்கக் கூடியது? அவ்வாறு சேர்ப்பதால் விஜயின் லட்சியமான ஊழலை ஒழிப்பேன், ஊழல்வாதிகளை தண்டிப்பேன், ஊழல் செய்யவும் மாட்டேன், ஊழல் செய்யவும் விடமாட்டேன் செய்தவர்களையும் விடமாட்டேன் என்று கூறிவிட்டு இவ்வளவு பெரிய ஊழல்வாதிகளை சேர்த்தால் என்ன ஆகும்' என்று ஐ.ஏ.எஸ் அதிகாரி சகாயம் கேள்வி எழுப்பியுள்ளார்.**

**குட்கா வழக்கு விஜயபாஸ்கர்!**

தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள விஜய் லஞ்சத்தை ஒழிப்பேன், பொதுப்



பணத்தை தொட மாட்டேன், பொதுப் பணத்தை தொட்டவர்களையும் விடமாட்டேன் என்றெல்லாம் பேசியது மக்களிடையே பெரிய நம்பிக்கையை உருவாக்கி இருக்கிறது. ஆனால். இன்றைக்கு முன்னாள் அ.தி.மு.க அமைச்சர்கள் குறிப்பாக புதுக்கோட்டை விஜயபாஸ்கர். அவர் மீது பல ஊழல் வழக்குகள் தொடர்ந்து இருக்கிறது, அவர் ஊழல் வழக்குகளில் சம்பந்தப்பட்டிருக்கிறார், அவருக்கு எதிராக குட்கா வழக்குகள் எல்லாம் நிலுவையில் இருக்கிறது.

அதேபோல, அவர் வருமானத்துக்கு மீறி சொத்து சேர்த்த நிலை எல்லாம் இருக்கிறது. ஊழலின் உச்சம் தொட்டவராகத் தான் அவர் கருதப்படுகிறார். பணம் இருந்தால் எதையும் சாதிக்க முடியும் என்ற எண்ணம் கொண்டவர் அவர். விராலிமலை தொகுதியில் வெற்றி பெற்றதும் கூட வாக்காளர்களுக்கு 2000, 3000 ரூபாய் என்று லஞ்சம் அளித்து அதன் மூலம் வெற்றி பெற்று இருக்கிறார்.

**சட்ட விதிகளை மீறிய விஜயபாஸ்கர்!**

ஊழலால் அவர் பெருந் தொகையை சேர்த்து இருப்பதாக அறியப்படுகிறார். புதுக்கோட்டையில் அவர் பல கல்குவாரிகளை சட்ட விதிகளை மீறி நடத்துவதாக புகார்கள் வருகின்றன. அது உண்மை.

பெரும் ஊழல் முறைகேட்டில் ஈடுபட்ட அவரைப் போன்றவர்களை எல்லாம் இன்றைக்கு தமிழக வெற்றிக் கழகத்தில் இணைத்துக் கொள்வது என்பது விஜய்க்கு ஒரு பின்னடைவாகத்தான் பார்க்கப்படுகிறது. நேர்மையான ஆட்சி அளிப்பேன் என்று சொல்லக்கூடிய விஜயின் வார்த்தைக்கு சேதாரத்தை ஏற்படுத்தி விடுமோ என்ற நிலை இருக்கிறது. இவர்களை எல்லாம் கட்சியில் சேர்த்து இருக்கக் கூடாது, உண்மையில் சொல்லப் போனால் ஊழலின் உச்சம் தொட்ட அ.தி.மு.க. அமைச்சர்களை எல்லாம் சேர்த்து இருக்கக் கூடாது என்று ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி சகாயம் கூறினார்.

# 'தி இந்து' நாளேடு கடும் கண்டனம்... முதல் பக்கத் தொடர்ச்சி

அமைச்சர்கள் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை, அவை சிவில் வழக்குகள் அல்லது அரசியல் விவாதங்களின் மூலம் இயல்பாகத் தீர்க்கப்பட வேண்டியவையாக இருந்தாலும், அவற்றை உடனடியாக 'குற்றவியல் தவறான தகவல்' அல்லது 'அவதூறு' எனக் கருதி குற்றவியல் நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருப்பது கவலையளிக்கிறது.

புதிய அரசு, மக்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டும் என்பதற்கான புதிய நடைமுறைகளை உருவாக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. கருத்து வேறுபாடுகளை சகிப்புத்தன்மையுடன் ஏற்றுக்கொண்டு, எதிர்ப்புக் குரலை ஒடுக்குவதற்காக தன்னிடம் உள்ள அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தாமல் இருக்க வேண்டும்.

வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட எந்த அரசும், பொதுத் தளங்களில் வெளிப்படுத்தப்படும் விமர்சனங்களாலும் கருத்து வேறுபாடுகளாலும் மேலும் செழுமையடைய முடியும்; அவற்றைக் கேட்கும் மனப்பான்மை இருந்தால் மட்டுமே அது சாத்தியமாகும்.

தீங்கு விளைவிக்கும், ஆபாசமான அல்லது ஒழுக்கக்கேடான உள்ளடக்கங்களைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் இருந்தாலும், அந்தக் கட்டுப்பாடுகள் கருத்துச் சுதந்திரம் என்ற அடிப்படை உரிமையின் மேலாதிக்கத்துடன் சமநிலைப்படுத்தப்பட வேண்டும் என்பதை அரசு எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு 'தி இந்து நாளேடு' தனது தலையங்கத்தில் த.வெ.க. அரசின் தலையில் குட்டியுள்ளது.

விளாத்திகுளம் தொகுதியில் த,வெ,க,வை கைமா புரோட்டா போட்ட


# மார்கண்டேயன் எம்.எல்.ஏ.வை கைது செய்வதா?

## தமிழ்நாடு பாடநூல் கழக முன்னாள் தலைவர் திண்டுக்கல் லியோனி கண்டனம்!

சென்னை, ஜூலை 23-

"விளாத்திகுளம் தொகுதியில் த.வெ.க.வை கைமா புரோட்டா போட்ட கழக சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயனை கைது செய்வதா?" என்று பாடநூல் கழக முன்னாள் தலைவர் திண்டுக்கல் லியோனி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தமது முகநூலில் பதிவிட்டிருப்பதாவது:-



தேர்தலுக்கு முன் விளாத்திகுளத்தில் நடந்த பாலியல் வன்கொடுமையைக் குறித்து த.வெ.க. தலைவர் நடிகர் விஜய் கடுமையாகக் குரல் எழுப்பி, சுமார் 40 நிமிடங்கள் பேசினார்.

ஆனால், அதே தொகுதியில் த.வெ.க.வை கைமா புரோட்டா போட்டு, தி.மு.க.வின் மார்கண்டேயன் வெற்றி பெற்றார்.

பாலியல் வன்கொடுமை, போதைப் பழக்கம், பத்திரப்பதிவு ஊழல், அரசு வழக்கறிஞர் நியமன ஊழல் போன்ற எண்ணற்ற குற்றப் பின்னணி கொண்ட த.வெ.க. அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் மீது நடவடிக்கை எடுக்க வக்கில்லாமல், அவதூறு வழக்கில் விளாத்திகுளம் எம்.எல்.ஏ. மார்கண்டேயனைக் கைது செய்ததை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

ரீல்ஸ்களில் காலம் கடத்தும் த.வெ.க.வை, வரும் தேர்தல்களில் மக்கள் கொத்து புரோட்டா போட்டு பாடம் கற்பிப்பார்கள்.

இவ்வாறு அவர் தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.